**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மாற்றுத் திறனாளிகளின் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு திட்டங்களை 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.12 நாள்: 07–03– 2014
விஜய, மாசி 23,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.18, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 22–02–2013.
2. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3311/த.நா.மா.தி.ந.வா/2013, நாள் 7.6.13, மற்றும் நாள் 4.2.14; ந.க.எண்.9213/ த.நா.மா.தி.ந.வா/2012, நாள் 28.1.14.

——————

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்திட 2012–2013 ஆம் நிதியாண்டில் ரூ.85.00 இலட்சமும், நிர்வாகச் செலவினத்திற்காக ரூ.15.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.

2. அரசு கடித எண்.11196/மா.தி.ந.2.1/2013, நாள் 13–09–2013ல், மேற்கண்ட நிதியினை செலவு செய்திடவும், இச்செலவினம் குறித்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில் பின்னர் பின்னேற்பாணை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் முதன்மைச் செயலாளர்/மாற்றுத் திறனாளிகளுக்கான ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளன.

3. முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில், இத்திட்டத்தின் கீழ் உதவிகள் வேண்டி நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்து கொண்டே இருப்பதால், இவ்வாரியத்தின் கீழ் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை 2013–2014 ஆம் ஆண்டிலும் தொடர வேண்டியது அவசியம் என தெரிவித்து, உயர்ந்துள்ள ஊழியர்கள் சம்பளம், எரிபொருள் விலை உயர்வு மற்றும் மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி உயர்த்தப்பட்டது (ரூ.1000/–லிருந்து ரூ.2,000/–) ஆகியவற்றை கருத்தில் கொண்டு நிர்வாகச் செலவிற்காக ரூ.15.00 இலட்சமும், மேலும் 2012–13ஆம் நிதியாண்டிற்கான நிலுவையில் உள்ள 702 விண்ணப்பங்களை தீர்வு செய்ய ரூ.71,14,950/–ம் நடப்பு நிதியாண்டில் பெறப்பட்ட 391 விண்ணப்பங்களை தீர்வு செய்ய என ரூ.56,66,250/– ஆக மொத்தம் ரூ.1,42,81,200/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2013–14 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் பல்வேறு சமூக பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்திட ரூ.94.00 இலட்சம் (ரூபாய் தொண்ணூற்று நான்கு இலட்சம் மட்டும்) மற்றும் நிர்வாகச் செலவினத்திற்கு ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) என மொத்தம் ரூ.1.00 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு

ஆணையிடுகிறது. மேலும், 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களில், பதிவு மூப்பு வரிசை அடிப்படையில் நலத் திட்ட உதவிகளை வழங்கி செலவினம் மேற்கொள்ளுமாறும் மேலும், மீதமுள்ள விண்ணப்பங்களை 2014–15 ஆம் நிதியாண்டில் முதுநிலையுடன் சேர்த்துக் கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநிலத் திட்டம் – ME – மாற்றுத் திறனாளிகளுக்கான நல வாரியத்திற்கு மானியங்கள்–09– உதவித் தொகை 03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை .

(து.தொ.கு..2235–02–101–ME–0936)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை, உடனடியாக செலவினம் மேற்கொள்ளவும், பின்னர் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் பின்னேற்பாணை பெற்றும் கொள்ளவும், உறுப்பினர்–செயலர், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்குப் பணமாக வழங்கப்படாமல், இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பெயரிலான பின்வரும் தன்வைப்பு கணக்கில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக வரவு வைக்கப்பட வேண்டும்:–

K வைப்பீடுகளும் முன்பணங்களும் (b) வட்டியில்லா வைப்பு தொகைகள் 8443.00 உரிமையியல் வைப்பீடுகள் 800 இதர வைப்பீடுகள் DW தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியத்திற்கான வைப்பீடுகள்.

DPC 8443 00 800 DW 000C (வரவுகள்)

DPC 8443 00 800 DW 0008 (செலவுகள்)

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.9951/நிதி(சந)/2014, நாள் 03.03.14–ன்படி அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் / அனைத்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்கள். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.(பெயரில்)

மாநில கணக்காயர், சென்னை– 18.

<u>நகல்:–</u>

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.

நிதி (சமூக நலம்)த்துறை, சென்னை–9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.